# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். **028/மா/2018**

ஆணை எண். **100/2018**

நாள் : **16/04/2018**

திரு R. முனியப்பன்,
தஞ்சாவூர் 613 008. – முறையீட்டு மனுதாரர்

திருமதி P. அமலோற்பவமேரி,
உதவியாளர்,
தஞ்சாவூர் மாநகராட்சி, – எதிர் மனுதாரர்
தஞ்சாவூர்.

தஞ்சாவூர், வடக்கு வாசல், எண்.89–A.V. பதி நகர் முகவரியில் வசிக்கும் திரு R. முனியப்பன் அவர்களின் 15.02.2018 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 19.02.2018 அன்று பெறப்பட்டு, 028/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக மாநகராட்சி ஆணையரின் அறிக்கைப் பெறப்பட்டு கீழ்க்காணும் ஆணைய வெளியிடப்படுகிறது :-

## ஆணை

தஞ்சாவூர், வடக்கு வாசல், எண்.89–A.V. பதி நகர் முகவரியில் வசிக்கும் திரு R. முனியப்பன் என்பவர், தான் மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவுப் பணியாளராகப் பணிபுரிந்து 30.06.2017 அன்று பணி ஓய்வு பெற்றதாகவும், அன்றைய நாளில் கலவை உரக்கிடங்கில் துப்புரவுப் பணி மேற்பார்வை பணியாளராகப் பணிபுரியும் திருமதி எம்.அனுராதா என்பவரின் அறிவுறுத்தலின்பேரில் ஓய்வூதியப் பிரிவு B2 இருக்கை உதவியாளர் திருமதி P. அமலோற்பவமேரி அவர்களைச் சந்தித்ததாகவும், அப்போது தனது ஓய்வூதியப் பலன்கள் விரைந்து கிடைத்திட உதவும் வகையில் ரூபாய் 1000/– கையூட்டுக் கோரியதாகவும் அத்தொகை தன்னிடம் இல்லாத நிலையில் திருமதி எம். அனுராதா அவர்களிடம் கடன் பெற்று B2 இருக்கை உதவியாளருக்கு கையூட்டாக வழங்கியதாகத் தெரிவித்துள்ளார். ஓய்வு பெற்று ஆறு திங்களுக்கு மேலாகியும் ஓய்வூதியப் பலன்கள்

கிடைக்கப் பெறாத நிலையில் திருமதி P. அமலோற்பவமேரி மீது உரிய விசாரணை மேற்கொள்ளவும், ஓய்வூதியப் பலன்கள் விரைந்து கிடைத்திட நடவடிக்கை எடுக்கக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக மாநகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. முறையீட்டு மனுதாரர் துப்புரவுப் பணியாளர் பொறுப்பிலிருந்து 30.06.2017 அன்று பணி ஓய்வு பெற அனுமதிக்கப்பட்டுள்ளார். ஓய்வு பெற்ற ஐந்து நாட்களுக்குள் அவரது ஓய்வூதியக் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு 05.07.2017 நாளிட்ட கடிதத்தில் தணிக்கைச் சான்று வழங்கக்கோரி தஞ்சாவூர் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை உதவி இயக்குநருக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதனை பரிசீலனை செய்த உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை உதவி இயக்குநர், மனுதாரருக்கு ஊதியம் நிர்ணயம் செய்ததில் உள்ள சில குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி உரிய முறையில் திருத்தங்கள் செய்து திருத்திய ஓய்வூதியக் கருத்துருவினைஅனுப்புமாறு 27.11.2017 நாளிட்ட கடிதத்தில் மாநகராட்சி ஆணையரைக் கோரியுள்ளார். உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை உதவி இயக்குநர் சுட்டிக்காட்டிய குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டு, மனுதாரருக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கான தணிக்கைச் சான்றினை வழங்கக் கோரி 20.03.2018 நாளிட்ட கடிதத்தில் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை உதவி இயக்குநருக்கு மீளவும் அனுப்பியுள்ளதாக மாநகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

3. தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கையை ஆய்வு செய்ததில் கீழ்க்காணும் நிகழ்வுகள் கண்டறியப்பட்டுள்ளன :-

(1) மனுதாரர் ஓய்வு பெற்ற நாள் : 30.06.2017 ;

(2) தணிக்கைச் சான்று வழங்கக் கோரி உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை உதவி இயக்குநருக்கு எழுதப்பட்ட கடிதத்தின் நாள் : 05.07.2017 ;

(3) குறைகளை சுட்டிக்காட்டி அதை நிவர்த்தி செய்து மீளக் கருத்துரு அனுப்புமாறு உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் கடிதம் நாள்: 27.11.2017 ;

(4) மாநகராட்சி ஆணையரால் திருத்திய கருத்துரு அனுப்பிய கடிதத்தின் நாள் : 20.03.2018.

மனுதாரர் ஓய்வு பெற்ற ஐந்தாவது நாளிலேயே தணிக்கைச் சான்று பெறுவதற்கான கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. ஓய்வு பெற்ற நாளன்றே திருமதி அனுராதா என்பவரிடம் ரூ.1000/– கைமாற்றாகப் பெற்று, அத்தொகையினை B 2 இருக்கை உதவியாளருக்கு கையூட்டாக வழங்கியதாக மனுதாரர் குறிப்பிட்டது ஏற்புடையதல்ல. முறையீட்டு மனுதாரருக்கு பண உதவி வழங்கியதாகக் கூறப்படும் திருமதி எம். அனுராதா என்பவர் இதனை மறுத்துள்ளார். முறையீட்டு மனுதாரர் ஓய்வு பெற்ற நாளன்று ரூ.20/– பத்திரத்தில் உறுதிமொழி கையெழுத்திடவே 'எச் 4 ' இருக்கை எழுத்தர் வரக்கூறியதாகத்தான் தான் தெரிவித்தேன் என்றும் திருமதி பி. அமலோற்பவமேரிக்கும் இதற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை எனத் தெரிவித்துள்ளார். மேலும், கையூட்டுப் பெற்றுக் கொண்டு காலம் தாழ்த்துவதாகக் குற்றம் சாட்டப்பட்ட திருமதி பி. அமலோற்பவமேரியும் 05.09.2017–இல் 'B2' இருக்கையிலிருந்து 'H1' இருக்கைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

4. முறையீட்டு மனுதாரர் ஓய்வு பெற்று ஒன்பது திங்கள்களுக்கு மேலாகின்றன. ஓய்வு பெற்ற ஒருசில மாதங்களிலேயே ஓய்வூதியம் கிடைக்கப்பெறாத விரக்தியில் இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளதாகத் தெரிகிறது. கையூட்டு வழங்க பண உதவி செய்ததாக மனுதாரர் குறிப்பிட்டுள்ள அலுவலரும் அதனை மறுத்துள்ளார். எனவே, மனுதாரர் கூறிய குற்றச்சாட்டை நிரூபிக்க போதிய ஆதாரம் ஏதும் சமர்ப்பிக்கவில்லை. மேலும், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையினரிடமிருந்து தணிக்கைச் சான்று வரப்பெற்றவுடன் முதுநிலைப் பட்டியல் அடிப்படையில் முறையீட்டு மனுதாரருக்கு ஓய்வூதியப் பலன்கள் வழங்கிட உறுதி செய்யுமாறு தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2018– ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், 16–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. மாநகராட்சி ஆணையர்,
   தஞ்சாவூர் மாநகராட்சி,
   தஞ்சாவூர்.

2. திரு R. முனியப்பன்,
   89– A.V. பதி நகர்,
   வடக்கு வாசல்,
   தஞ்சாவூர் – 613 008.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்